சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர்(பொ) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.என். சந்தனம்மாள்.,

ந.க. எண் : 37/2024 நாள் : 7.02.2024

பொருள் : குடியிருப்பு மனை உட்பிரிவு அங்கீகரித்தல் – திண்டுக்கல் மாவட்டம் – சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி – சேவுகம்பட்டி வருவாய் கிராமம் சர்வே எண். 812/9A–ல் 3749.00 ச.மீ (0.9264 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள 13 குடியிருப்பு மனைகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது– குடியிருப்பு மனைகளை வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளாச்சித்துறை UD4(3) நாள் 09.12.2020.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.LG8FYQOZ/2022/TCP நாள்.28.02.2023.
4. அப்பம்பாளையம் சார்பதிவக தானப்பத்திர பதிவு எண்.850/2023 நாள்.30.03.2023
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.LG8FYQOZ/2022/TCP நாள்.17.05.2023.
6. சேவுகம்பட்டி பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.9/2024, நாள்.30.01.2024.

*****

உத்திரவு:

திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சி சேவுகம்பட்டி வருவாய் கிராமம், புல எண்.812/9A ல் 3749.00 ச.மீ (0.9264 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைகளை பார்வை 3ல் காணும் கடிதத்தில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி குடியிருப்பு மனைகளுக்கு வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பரிசீலனைக் கட்டணம் வங்கி வரைவோலை மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சந்தை மதிப்புக் கட்டணம் உரிய அரசுத் தலைப்பில் நிலக்கோட்டை சார்நிலைக் கருவூலகத்தில் 7.02.2024ம் நாள் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு உரிமையாளரால் சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டிருந்த அளவுகளின்படி பொது உபயோகம் மற்றும் உத்தேச சாலைகளை பார்வை 4ல் காணும் அப்பம்பாளையம் சார்பதிவகம் நன்கொடை ஆவண எண். 850/2023 நாள்.30.3.2023.ன் மூலம் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 5ல் காணும் நகர் ஊரமைப்பு துறை, திண்டுக்கல் மாவட்ட துணை இயக்குநரது கடித்தில் சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 6 ன்படி இசைவு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

நன்கொடை ஆவணங்களின் மூலம் சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட புல எண். 812/3B, 812/3B1A, 812/3A, 812/3A1, 812/3B1A1, 812/3A1B மற்றும் 812/9, 812/9A இல் சாலைகள், மற்றும் பொது இடங்களுக்கு சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் மாற்றம் செய்து வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட பட்டா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 விதி(3) மற்றும் விதி(9)ன்படி உள்ளாட்சி மற்றும் அரசுத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டிய தொகை மனுதாரரால் 07.02.2024ம் தேதி செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க மனுதாரரால் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம்

1. பேரூராட்சிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட இடத்தின் பரப்பளவு 25.89 சதுரமீட்டர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ள விபரம்

   சாலைகள் மொத்தம் 1453.24 சதுர மீட்டர் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
3. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே புல எண்.812/9A–ல் 3749.00 ச.மீ (0.9264 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைகளுக்கு பார்வை 6ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்காணும் மனைகளை அங்கீகரித்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனையிடம் காலியிடமாக இருப்பின் கட்டிட அனுமதி பெற்ற பின்பு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
2. மனையில் கட்டிடம் கட்டப்படும் இருப்பின் அதற்கு முறையாக உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து அனுமதி தனியே பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. மனையிட வரன்முறை அனுமதியை கட்டிட அனுமதியாக கருதக்கூடாது.
4. மனை தொடர்பாக தவறான ஆவணங்கள் சமர்ப்பித்திருந்தால் இவ்வுத்திரவு முன்னறிவிப்பு ஏதுமின்றி ரத்து செய்யப்படும்.
5. மனையிடத்திற்கு நிர்ணயித்த தொகை குறைவாக இருப்பின் நிலுவைத் தொகையினை செலுத்த வேண்டும்.
6. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களின் உத்திரவின்படி வழங்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள ஏற்கனவே, விற்கப்பட்ட தனித்த மனைக்கு மட்டும் இவ்வுத்திரவு பொருந்தும்.
7. மனுதாரர் மனையிடத்தில் உயர்மின் அழுத்தக்கம்பி / குறைந்த மின் அழுத்தக்கம்பி செல்லும் பட்சத்தில் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

8. நீர்நிலைப்பகுதி அரசு புறம்போக்கு பகுதி, வாய்க்கால் ஓடை , ஏரி, குளம், ஆறு, சாலை போன்ற இடங்களில் ஆக்கிரமிப்பில் உள்ள மனைக்கு இவ்வுத்தரவு செல்லத்தக்கது அல்ல.
9. நில உரிமை குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.

செயல் அலுவலர்(பொ),
சேவுகம்பட்டி முதல் நிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்.

பெறுநர் :

திரு. டி. பாலன் மற்றும் கே. சேகர்,
9-6-41, அக்ரஹாரம் ஒற்றைத் தெரு, நிலக்கோடை,
வத்தலக்குண்டு.

நகல் :

- நகர் ஊரமைப்புத்துறை, திண்டுக்கல் மாவட்ட துணை இயக்குநருக்கு தகவலுக்காக.
- திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை திண்டுக்கல் வட்டம், திண்டுக்கல்.
- இருப்பு கோப்பிற்கு.